## இலங்கை முதலீட்டுச் சபை - 2013

இலங்கை முதலீட்டுச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1978 இன் 4 ஆம் இலக்க பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை முதலீட்டுச் சபையின் (பீஓஐ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 நவம்பர் 09 ஆந் திகதிய 1783/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஹம்பாந்தோட்டையில் இனங்காணப்பட்ட 228.8784 ஹெக்டயர் விஸ்தீரனமுள்ள காணியின் உரிமையாண்மை இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்ககங்களின் பயன்பாட்டிற்காக கௌரவ மேன்மைதங்கிய இலங்கை சனாதிபதியால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தலின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் காணி 2013 திசெம்பர் 31 வரையும் எல்கேஏஎஸ் 16 இன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எல்கேஏஎஸ் 18 இன் பிரகாரம், தொடரும் சேவைகளின் ஏற்பாடுகளிற்கான கட்டணம் வழங்கப்பட்ட சேவைகளில் ஆண்டிலுள்ள வருமானமாக கருதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எந்தவொரு சேவைகளையும் வழங்காமல், இரத்துசெய்யப்பட்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 3,301,942 தொகை மீளாய்வாண்டின் போது காணியின் தவணைப்பண வருமானமாக கருதப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 179,547,196 தொகையான அத்தகைய வருமானம் பிற்போட்ட வருமான மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிற்போட்ட வருமான மீதி அதே தொகையாலும் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 202,530,307 பெறுமதியான பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாணங்கள் உரிய சொத்துக் கணக்கிற்கு மாற்றுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2013 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பெறுமதி சேர் வரி (வற்) வருவாய்களின் பிரகாரம், இலங்கை முதலீட்டுச் சபை அனுமதிக்க முடியாத உள்ளீட்டு வற் குறைத்துக் காட்டுவதன் மூலம் ரூபா 9,108,682 தொகையான வற் வரி காலாவதியாகியிருந்தது. எனவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வற் மற்றும் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ) கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறை பேட்டை வலயத்தில் 10 இலங்கை முதலீட்டுச் சபை முயற்சிகளால் அமைந்திருந்த 1.62 ஏக்கர் பரப்புள்ள காணிகள் தொடர்பில் ரூபா 899,569 தொகையான நில வாடகை 2013 ஆம் ஆண்டின் போது பட்டியலிடப்பட்டோ அல்லது கணக்கிற்குள் எடுக்கப்பட்டோ இருக்கவில்லை. எனவே, வருமானம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறை பேட்டை வலயத்தில் எண்ணெய் அகழ்ந்தெடுக்கும் பம்பு வழங்குதல் மற்றும் பொருத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,363,239 ஆன தொழில் ஆரம்பிப்பு முற்பணம் 2008 பெப்ரவரியில் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலில் தீர்க்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் இது மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு தீர்க்கப்படாத தொழிலாரம்பிப்பு முற்பணமாக காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 10,118,713 தொகையான பெறப்பட்ட மூன்று நிதிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சில்லறைக் கடன்கொடுத்தோரின் கீழ் தவறுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான வற் வருவாய்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிடமிருந்து பெறவேண்டிய வாடகை வருமானத்துடன் தொடர்புபட்ட ரூபா 4,796,760 தொகையான வற் வரி உள்ளடக்கப்படாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆகவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வற் வருவாய்களின் மீதிகளுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய வற் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) முதலீட்டுச் சபை முயற்சிகளிலிருந்து வருமதியானவை.

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகரித்த முயற்சிகளிலிருந்து அறவிட வேண்டியவை மற்றும் நட்டங்களிற்கான ஏற்பாடு மற்றும் அதில் பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் என்பன முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை முதலீட்டுச் சபை முயற்சியிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகள் | 664,452,940 | 701,884,118 | 623,861,381 | 631,911,594 | 593,483,063 |
| நட்டங்களிற்கான ஏற்பாடு | 493,484,649 | 492,790,570 | 437,041,560 | 249,452,238 | 227,775,883 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்தக் வருமதிகளின் சதவீதமாக நட்டங்களிற்கான ஏற்பாடு | 74 | 70 | 70 | 39 | 38 |
| ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் | 13,483,407 | 5,517,032 | 73,113,266 | 8,306,417 | 9,279,955 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த ஐந்து ஆண்டுகளின் போது நட்டங்களிற்கான ஏற்பாடு 2009 இல் 38 சதவீமாக ஆக இருந்து 2013 இல் 74 சதவீதமாக சடுதியாக அதிகரித்திருந்தது. ஆதலால் அந்த பெறவேண்டியவைகளின் அறவீடு மீதான பின்தொடர்நடவடிக்கை மிகவும் பலவீனமானதாக இருந்ததைக் காட்டுகிறது.

(ii) ரூபா 493,484,649 ஆன நட்டத்திற்கான மொத்த ஏற்பாட்டில், ரூபா 486,153,378 அல்லது ஏறத்தாழ 99 சதவீதமாக பிரதி நிதித்துவப்படுத்தியிருந்த 100 சதவீதமான நட்டங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து பெறவேண்டியவற்றில் செய்யப்பட்டிருந்தது.

(iii) ரூபா 201,012,748 ஆன நட்டங்களிற்கான ஏற்பாடு மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு பெறவேண்டிய ரூபா 233,160,357 ஆன மொத்த வருடாந்த கட்டணத்தின் 86 சதவீதமாக இருந்த வருடாந்த கட்டணங்களிற்காக செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கடன்பட்டோர்**

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறான நீண்ட காலமாக அறவிடப்படாதிருந்த ஏனைய கடன்பட்டோர் மீதிகள் மற்றும் அவற்றின் நட்டங்களிற்கான ஏற்பாடு என்பவற்றின் விபரங்கள் முன்னைய மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய கடன்பட்டோர்கள் | 131,274,290 | 66,891,763 | 61,204,152 | 103,810,214 |
| ஐயக் கடன்களிற்கான / நட்டங்களிற்கான ஏற்பாடு | 120,257,749 | 61,204,152 | 7,688,630 | 48,234,339 |
| மொத்த ஏனைய கடன்பட்டோரின் சதவீமாக ஐயக்கடன் / இட்டங்களிற்கான ஏற்பாடு | 91.6 | 91.5 | 12 | 46 |

து தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய கடன்பட்டோரில் நட்டங்கள் மொத்த பெறவேண்டியவைகளின் 91.6 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது ஆதலால் அந்த பெறவேண்டிய மீதிகளின் அறவீடு மீதான பின்தொடர்நடவடிக்கை மிகவும் பலவீனமானதாக இருந்ததைக் காட்டுகிறது.

(ii) வத்துப்பிட்டிவல வீடமைப்பு அலகின் ஏல விற்பனையாளராக இருந்த தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,604,200 தொகை 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் கம்பனிக்கும் இலங்கை முதலீட்டுச் சபைக்கும் இடையில் உடன்படிக்கையின் உள்ளதன்மையை நிரூபிப்பதற்கு எவ்வித சான்றுகளும் கிடைக்கவில்லை.

(iii) ஏனைய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்ட ரூபா 507,650 ஆன காசு மோசடி மற்றும் ரூபா 2,090 ஆன இருப்புக் குறைவு பத்து ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தது.

(iv) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான ஏனைய கடன்பட்டோரின் மொத்தத் தொகையில் 98 சதவீதம் அல்லது ரூபா 128,982,001 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையை பிரதிநிதித்துவப்படுத்தியது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- புனரமைப்பு மற்றும் தமிழ் அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சிகள் அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு போன்ற முன்னைய அமைச்சுக்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 5,257,979 தொகை ஏனைய கடன்பட்டோரில் உள்ளடங்கியிருந்தது.

- மூன்று அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், அத்தகைய நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையாக காட்டப்பட்ட ரூபா 16,070,868 தொகை இருந்த போதிலும் தீர்க்கப்பட வேண்டியதாக எந்தவொரு நிலுவையான மீதிகளும் இருக்கவில்லை.

- இலங்கை முதலீட்டு சபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய மீதிகளிகளிற்கு இடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| **நிறுவனம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | **இலங்கை முதலீட்டுச் சபை** | **உரிய நிறுவனம்** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை (ஜேஈடிபீ) | 52,412,573 | 50,000,000 | 2,412,573 |
| முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 55,115,000 | இல்லை | 55,115,000 |

- சில அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு பதிலாக நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்கான 100 சதவீத ஏற்பாடுகள் கணக்குகளில் செய்யப்பட்டிருந்தது. நட்டங்களிற்கான ஏற்பாடு அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 128,982,001 ஆன மொத்த நிலுவையாக இருக்கின்றவற்றின் ரூபா 118,114,460 அல்லது 91.57 சதவீதமாக இருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சில்லறை கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தவை மீளாய்வாண்டின் போதான நானாவித வருமானமாக ரூபா 5,931,949 தொகை இனங்காணப்பட்டிருந்ததுடன் இது உறுதிப்படுத்தல்கள், மூல ஆவணங்கள், பட்டோலைகள் போன்ற சான்றுகள் கிடைக்காமையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் மற்றும் 2000 சனவரி 31 ஆம் திகதிய பிஎவ்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 161,120,804 கூட்டு மொத்தத் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக 1997 முதல் 2013 வரையான காலமாக இலங்கை முதலீட்டுச் சபை நிதிகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை | மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளை பெற்றிருந்த இலங்கை முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலிற்கு முரணாக மேலும் ரூபா 15,000 ஆன மாதாந்த சாரதியின் படியையும் பெற்றிருந்தனர். இலங்கை முதலீட்டுச் சபை மீளாய்வாண்டின் போது மேற்குறிப்பிட்ட படிகளிற்காக ரூபா 12,302,871 தொகையை செலுத்தியிருந்தது. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மற்றும் 2007 சனவரி 02 ஆந் திகதிய டிஎம்எஸ்/ஏ2/பீஓஜ ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் கடிதம் | (i) இலங்கை முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் தொடர்புபட்ட அதிகாரிகளிடமிருந்து வேண்டப்பட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பின்வருமாறு தொழில்சார் படிகள் அல்லது பட்டப்பின்படிப்பு படிகளை (மாதம் ஒன்றிற்கு குறைந்தது 5,000) அனுபவித்தனர். |

| சம்பள குறியீடு | சதவீதம் |
|---|---|
| ஜேஎம் வகுதி | 10 |
| எம்எம் வகுதி | 15 |
| எச்எம் வகுதி | 20 |

மீளாய்வாண்டின் போது இலங்கை முதலீட்டுச் சபையால் செலுத்தப்பட்ட அத்தகைய படிகளின் மொத்தம் ரூபா 2,392,917 ஆகும்.

(ii) இலங்கை முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக வருகை ஊக்குவிப்பு மற்றும் பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையினை காசாக்குதலுடன் சேர்த்து இரண்டும் அனுபவித்தனர். இது தொடர்பில், மீளாய்வாண்டின் போது பின்வரும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

- வருகை ஊக்குவிப்பு ரூபா 125,845,273
- விடுமுறை காசாக்குதல் ரூபா 59,098,318

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை முதலீட்டுச் சபையின் தொழிற்பாடுகள் ரூபா 290,920,997 ஆன மிகையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 239,124,766 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளால் ரூபா 51,796,232 ஆன அல்லது 22 சதவீதம் அதிகரிப்பைக் காட்டுகின்றது. வாடகை வருமானத்தின் அதிகரிப்பு, நீர் வழங்கலில் இருந்தான வருமானம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றின் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக உள்ளன.

மேலும் மீளாய்வாண்டினுள் முதலீட்டு சபை ரூபா 228,429,052 ஆன செயற்பாட்டு இலாபமொன்றை உழைத்திருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு இலாபம் ரூபா 137,599,489 உடன் ஒப்பிடுகையில் ரூபா 90,829,563 அல்லது 66 சதவீதம் செயற்பாட்டு இலாபத்தில் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

(அ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய 2 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான இலங்கை முதலீட்டுச் சபையின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்களை பின்வரும் அட்டவணை தருகின்றது.


| | | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| (i) | இலாபத்தன்மை விகிதம் | % | % | % |
| | தேறிய இலாப விகிதம் | 10.45 | 10.29 | 3.89 |

| | | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | மொத்த சொத்துக்கள் மீதான பெறுகைகள் | 1.15 | 0.95 | 0.33 |
| | | **2013** | **2012** | **2011** |
| (ii) | செயற்பாட்டு விகிதம் | ---------- | ---------- | --------- |
| | கடன்பட்டோர் சுழற்சி விகிதம்- காலம் | 6.22 | 3.89 | 4.27 |
| | கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்- நாட்கள் | 58 | 115 | 105 |

### 3.2.2 செலவினத்தின் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மொத்தச் செலவினத்தில், ரூபா 1,983,947,246 அல்லது 79.6 சதவீதம் மற்றும் உத்தியோகத்தர் செலவினத்துடன் தொடர்புபட்ட 60 சதவீதம் நிர்வாகச் செலவினத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. சபையின் மொத்தச் செலவினத்தின் வகைப்படுத்தல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கீழே வரைபடத்தில் தரப்பட்டுள்ளது.

| **செலவினத்தின் வகுதி** | **தொகை** (ரூபா) | **சதவீதம்** |
|---|---|---|
| செயற்பாட்டுச் செலவினங்கள் | 337,247,895 | 13.5 |
| நிர்வாகச் செலவினங்கள் | 1,984,841,156 | 79.6 |
| அரசாங்க வரிகள் | 148,175,366 | 5.9 |
| ஏனைய செலவினங்கள் | 24,300,318 | 1 |
| மொத்தம் | 2,494,564,735 | |




### 3.2.3 பிரிவுகளின் செயற்பாடு மற்றும் இலாபத்தன்மை

பத்து ஏற்றுமதி செயன்முறை வலயங்கள், இரண்டு கைத்தொழில் பேட்டைகள் மற்றும் பிராந்திய அலுவலகம் சபையின் கீழ் செயற்படுகின்றதுடன் அத்தகைய சில வலயங்களின் நிதி முன்னேற்றம் கீழே தரப்டுகின்றன.

(i) பொல்காவெல ஏற்றுமதி செயன்முறை வலயத்தின் வரிக்கு முன்னரான இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 6.4 மில்லியன் அல்லது 34 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) இரண்டு ஏற்றுமதி செயன்முறை வலயம் மற்றும் ஏற்றுமதி செயன்முறை பேட்டை அதிக நிர்வாகக் கிரயம் காரணமாக 2008 இலிருந்து வரிக்கு முன்னரான நட்டங்களை தொடர்ச்சியாக அடைந்திருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஆண்டின் போது ஏற்பட்ட நட்டங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2013** | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ஏற்றுமதி செயன்முறை வலயம் | | | | | | |
| வத்துப்பிட்டிவல | 2,969 | 7,766 | 15,743 | 13,703 | 12,787 | 11,872 |
| கொக்கல | 14,050 | 11,775 | 26,980 | 17,503 | 23,149 | 23,412 |
| ஏற்றுமதி செய்முறை பேட்டை | | | | | | |
| மல்வத்தை | 2,748 | 5,531 | 3,226 | 3,458 | 3,639 | 2,576 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உடன்படிக்கைகள் கைச்சாத்திட்ட செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட அல்லது இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை என்பன பற்றிய விபரங்கள் 2013 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுளுக்கு கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **அனுமதிக்கப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை** | **கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை** | **ஆண்டின் போது தொடங்கிய செயற் திட்டங்களின் எண்ணிக்கை** | **இரத்து செய்யப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை** | **மூடப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை** | **இடை நிறுத்தப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|
| | ✓ * | ✓ * | ✓ * | ✓ ** | ✓ ** | ✓ ** |
| 2013 | 172 | 140 | 75 | 120 | 38 | 7 |
| 2012 | 238 | 163 | 98 | 79 | 26 | 9 |
| 2011 | 160 | 165 | 99 | 47 | 7 | 4 |
| 2010 | 364 | 270 | 144 | 124 | 28 | 10 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 384 | 182 | 134 | 93 | 12 | 4 |
| மொத்தம் | 1,318 | 920 | 550 | 463 | 111 | 34 |

✓ * இருக்கின்ற செயற்திட்டங்களின் விரிவாக்கல் உள்ளடங்கலாக

✓ ** செயற்திட்டங்களின் தற்போதைய நிலையின் பிரகாரம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அனுமதிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 28 சதவீதம் மற்றும் 14 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) வர்த்தக நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 2009 இல் 134 முதல் 2013 இல் 75 வரை குறைவடைந்திருந்தது.

(iii) இரத்து செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 50 சதவீதம் மற்றும் 46 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**(ஆ) வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருதல்**

(i) 2009 தொடக்கம் 2013 வரையான காலத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையால் கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (எவ்டிஐ) விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| துறை | நேரடி முதலீட்டின் பெறுமதி | | | | |
|---|---|---|---|---|---|
| | **2013** | **2012** | **2011** | **2010** | **2009** |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** |
| உற்பத்தி | 359.76 | 307.65 | 322.42 | 159.65 | 164.47 |
| விவசாயம் | 8.47 | 7.17 | 17.97 | 6.45 | 3.69 |
| சேவைகள் | 1,023.17 | 1,023.33 | 725.67 | 350.20 | 434.09 |
| மொத்தம் | 1,391.40 | 1,338.15 | 1,066.06 | 516.30 | 602.25 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விவசாயத்துறையின் கீழ் கவரப்பட்ட முதலீடுகள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 60 சதவீதத்தாலும் 53 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

- கவரப்பட்ட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

- உற்பத்தித் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 17 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) 2009 முதல் 2013 வரையான காலத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபை ஊடாக விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐஎஸ்) மற்றும் செய்யப்பட்ட உள்ளூர் முதலீடுகள் (எல்ஐ) கீழே தரப்படுகின்றன.


| **ஆண்டு** | **விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ)** | **விடுவிக்கப்பட்ட உள்ளூர் முதலீடுகள்** |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2013 | 958,958 | 553,063 |
| 2012 | 828,005 | 452,154 |
| 2011 | 655,513 | 368,587 |
| 2010 | 536,140 | 331,849 |
| 2009 | 495,506 | 278,762 |

மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ) மற்றும் செய்யப்பட்ட உள்ளூர் முதலீடுகள் (எல்ஐ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 16 சதவீதம் மற்றும் 22 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) இறக்குமதிக் கிரயம் மற்றும் ஏற்றுமதி உழைப்புக்கள்

கடந்த ஐந்து ஆண்டுகளின் போது இலங்கை முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் மொத்த இறக்குமதிக் கிரயங்கள் மற்றும் ஏற்றுமதி உழைப்புக்கள் கீழே அட்டவணை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **ஏற்றுமதி உழைப்புக்கள்** | **இறக்குமதிக் கிரயங்கள்** |
|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** |
| 2013 | 6,606 | 4,525 |
| 2012 | 6,042 | 4,345 |
| 2011 | 6,572 | 4,400 |
| 2010 | 5,171 | 3,360 |
| 2009 | 4,563 | 2,739 |




இறக்குமதிக் கிரயங்களினதும் ஏற்றுமதி உழைப்புக்களினதும் போக்கு

இலங்கை முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள் ஊடாக ஏற்றுமதி உழைப்புகள் 2012 இல் 8 சதவீதத்தால் குறைவடைத்திருந்த போதிலும் 2013 இல் 9 சதவீதத்தால்

அதிகரித்திருந்தது. மேலும், இலங்கை முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளால் ஏற்பட்ட இறக்குமதி கிரயம் 2012 இல் 1 சதவீதத்தல் குறைவடைந்திருந்ததுடன் 2013 இல் 4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை முதலீட்டுச் சபைக்கான அலுவலகப் பகுதியை பெறுவதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் இலங்கை முதலீட்டுச் சபை 1996 நவம்பரில் ஒரு குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்ததுடன் ஆரம்ப வைப்பாக கம்பனிக்கு ரூபா 2,637,240 ஐச் செலுத்தியிருந்தது. அந்த அலுவலகப் பகுதி 2010 யூனில் மேற்படி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபை 2014 திசெம்பர் 31 வரையும் வைப்புச் செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2013 இன் இறுதியிலுள்ளவாறு ரூபா 2,025,485 தொகையான மொத்த கேள்வி வைப்புக்களில் ரூபா 940,335 அல்லது 46 சதவீதம் மூன்று ஆண்டுகளை விட மேலாக இருந்த வைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. எவ்வாறாயினும், 2013 இன் இறுதிவரையும் அந்த மீதிகளைத் தீர்ப்பதற்கு இலங்கை முதலீட்டுச் சபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 33,018,480 தொகையான மொத்தப் பிடிகாசில், ரூபா 13,790,054 அல்லது 43 சதவீதம் கடந்த மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்த தொகையை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஈ) இலங்கை முதலீட்டுச் சபையானது 2000 திசெம்பர் 29 இல் நிலவிய வீதங்களில் வருடாந்தம் 6.9 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்குமாயின் மின்சார செலவை மீளளிப்பதற்கு ஹொரணை ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் அமைந்திருந்த இறப்பர் உற்பத்திக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன.

(i) இலங்கை முதலீட்டுச் சபையானது செயற்திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்க முன்னர் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெற்றிருக்கவில்லை.

(ii) கம்பனியானது 2002 யூன் தொடக்கம் 2007 செப்தெம்பர் வரையான காலத்தில் மின்சார விலைப்பட்டியல் வீதம் அதிகரித்தமை தொடர்பாக ரூபா 356,793,568 தொகையும் இழப்பீட்டுக் கொடுப்பனவிலான தாமதத்திற்கான வட்டி மற்றும் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் (ஐசீசீ) சர்வதேச மத்தியஸ்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இறுதித் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த கிரயம் என்பன தொடர்பாக ரூபா 388,161,877 ஆன தொகையையும் கோரிக்கை செய்திருந்தது. உயர் நீதிமன்றத்தில் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக இலங்கை முதலீட்டுச் சபை மேன்முறையீடு செய்திருந்தது. பின்னர் நீதிமன்றம் இலங்கை முதலீட்டு சபைக்குச் சாதகமாக தீர்ப்பைக் வழங்கியிருந்தது. கம்பனியானது இலங்கை முதலீட்டுச் சபையில் சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தது. இரண்டு வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் கையாளப்பட்டன.

(iii) இலங்கை முதலீட்டுச் சபையானது செயற்திட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் பாவனைக்கு தேவையான இறப்பர் மரங்கள் உள்ளனவா என்பதற்காக சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றிருக்கவில்லை.

(iv) இலங்கை முதலீட்டுச் சபையானது நீதிமன்ற வழக்கின் முடிவிற்கு காத்திருப்பதன் காரணமாக கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய நில வாடகை, நீர்ப்பட்டியல் மற்றும் பங்களா வாடகை முதலியவற்றை அறவிட இயலாத நிலைமையிலுள்ளது.

(உ) பேர்த் தோட்டம் இலங்கை முதலீட்டுச் சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு முகாமைத்துவம் செய்வதற்கு இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்எல்எஸ்பிசீ) அந்தத் தோட்டத்தின் பகுதி கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை முதலீட்டுச் சபையானது இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து (எஸ்எல்எஸ்பிசீ) 2006 இலிருந்து தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களை பெற்றிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனமானது 2005 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ரூபா 10 மில்லியன் தொகை தவிர இலங்கை முதலீட்டுச் சபைக்கு ஒழுங்காக இலாபங்களை அனுப்பியிருக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பேர்த் தோட்டம் சம்பந்தமாக இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 16.47 மில்லியனாகும். எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபையானது 2013 திசெம்பர் 31 வரையும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய சரியான தொகையை தெளிவாக இனங்கண்டு பதிந்திருக்கவில்லை.

(iii) முகாமைத்துவக் கட்டணத்தைச் 15 சதவீதத்தால் அதிகரித்தல், பேர்த் தோட்டத்தால் வருமானத்தை ஒரு தலைப்பட்சமாக பயன்படுத்தியமை பேர்த்தோட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையான வருமான முதலீடுகளை ஒப்பந்தகாரர் பெயரில் முதலீடு செய்தமை, ஒப்பந்தக்காரரின் நடைமுறைக் கணக்கினூடாக ரூபா 12.42 மில்லியன் தொகையான பங்களா வாடகை மற்றும் மோட்டார் வாகனங்களின் அங்கீகாரமற்ற மாற்றம் என்பன இன்னமும் தீர்வு காணப்பட்டிருக்காமை போன்ற பேர்த் தோட்டத்திற்கு சம்பந்தமான விடயங்கள் உடன்படிக்கை நிபந்தனைகளின் ஆட்சேபணைக்குரியதாகும்.

## 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

ரூபா 97,937,000 கிரயத்தில் 2003 சனவரி 08 இல் இலங்கை முதலீட்டுச் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 122 ஏக்கர், 1 றூட், 27.4 பேர்ச் பரப்பளவுள்ள மலிடுவகந்த தோட்டம் என்ற பெயருடைய காணி 2014 மே மாத இறுதி வரை எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்தக் காணியின் புத்தகப் பெறுமதி ரூபா 100,800,000 ஆகும்.

## 4.4 வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட வளங்கள்

சபையால் வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு சில சொத்துக்களை முறையற்ற விதத்தில் விடுவித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கௌரவ சனாதிபதியால் வழங்கப்பட்ட 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பி1/40 ஆம் இலக்க கடிதம், 1997 சனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு

முரணாக, இரண்டு மோட்டார் வாகனங்கள் 2009 ஆம் ஆண்டின் போது முன்னைய வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இலங்கை முதலீட்டுச் சபையால் மீளாய்வாண்டு இறுதிவரை அந்த மோட்டார் வாகனங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 2,751,809 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. அமைச்சிடமிருந்து மீளளிக்க வேண்டிய தொகை அறவிடப்பட்டோ அல்லது பெறவேண்டியவையாகவோ இலங்கை முதலீட்டுச் சபையின் கணக்குகளில் கொண்டுவரப்பட்டோ இருக்கவில்லை.

(ஆ) முன்னைய வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் 2013 யூலையில் விபத்திற்கள்ளாகியிருந்ததுடன் சேதங்கள் ஏற்பட்டமை காரணமாக மதிப்பிடப்பட்ட திருத்தக் கிரயம் ரூபா 1,412,687 ஆக இருந்தது. அதில், ரூபா 129,309 காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடத் தவறியமை காரணமாக இலங்கை முதலீட்டுச் சபையால் வழங்க வேண்டியிருந்தது. தொடர்புபட்ட உத்தியோகத்தர்ககளிடமிருந்தோ அல்லது முன்னைய வரிசை அமைச்சிடமிருந்தோ இந்த நட்டங்களை அறவிடுவதற்கு இலங்கை முதலீட்டுச் சபையால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலவசமாக உலக வர்த்தக நிலையத்தில் (டபிள்யூரீசீ) கிடைத்த வாகன தரிப்பிட வசதிகளை பயன்படுத்துவதற்காக முன்னைய வரிசை அமைச்சிற்கு இலங்கை முதலீட்டுச் சபையால் ஒன்பது கார் தரிப்பிட அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இலங்கை முதலீட்டுச் சபை 2007 முதல் 2013 வரையான காலத்திற்காக வழங்கப்பட்ட இந்த வாகன தரிப்பிட வசதிகளின் சார்பில் உலக வர்த்தக நிலையத்திற்கு ரூபா 1,489,500 தொகை செலுத்தியிருந்தது.

### 4.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 96 நிறைவேற்றுப் பதவியினர் (பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வு பதவி உட்பட) உள்ளடங்கலாக பதவியினரில் வெவ்வேறு வகைகளில் நூற்றுநாற்பத்து ஒன்பது (149) வெற்றிடங்கள் நிலவியதுடன் 2013 திசெம்பர் 31 வரை அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறாகும்.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை | உள்ளபடியான ஆளணி | | | வெற்றிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | ஒப்பந்தம் | மொத்தம் | |
| நிறைவேற்றுப் பதவியினர் | 589 | 489 | 04 | 493 | 96 |
| எழுதுநர் மற்றும் இணைந்த பதவியினர் | 378 | 336 | 13 | 349 | 29 |
| பொது சேவை பதவியினர் | 332 | 288 | 20 | 308 | 24 |
| மொத்தம் | 1,299 | 1,113 | 37 | 1,150 | 149 |

(ஆ) தனியார் நிறுவனங்களிடமிருந்து பதினெட்டு ஊழியர்கள் இலங்கை முதலீட்டுச் சபையால் வெளியாருக்கு ஒப்படைக்கப்பட்டது. அவற்றில் பதின்நான்கு ஊழியர்கள் 2010 இற்கு முன்னர் வெளியாருக்கு ஒப்படைக்கப்பட்டது.

(இ) இலங்கை முதலீட்டுச் சபை வரிசை அமைச்சிற்கு ஒன்பது உத்தியோகத்தர்களை விடுவித்திருந்ததுடன் பொது முயற்சிகள் மற்றும் நல்லாளுகையின் 2003 யூன் 2 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் கூலிகளாக ரூபா 6,390,185 தொகை ஏற்பட்டிருந்தது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை முதலீட்டுச் சபை பொதுமக்களின் எதிர்ப்பு, குறைவான செயலாற்றல் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்ற காரணங்களால் குறுகிய காலத்திற்குள் மூன்று நிர்மாண வேலைகளை இடைநிறுத்தியதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 20,292,250 ஆன நட்டத்தை அடைந்திருந்தது.

(ஆ) 2013 இல் கொடுத்து தீர்க்கப்பட்ட கட்டுநாயக்கா ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் இலங்கை முதலீட்டுச் சபை தொழில்முயற்சி ஒன்றின் மூலம் முன்னரே அமைந்திருந்த இலங்கை முதலீட்டுச் சபையால் உடமையாக்கப்பட்ட ரூபா 95,822,000 பெறுமதியான காணியொன்று ரூபா 225,000,000 இறையின் அடிப்படையில் அரச கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. பிரதம மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்ட காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 135,000,000 ஆக இருந்தது. இது தொடர்பில், இலங்கை முதலீட்டுச் சபையானது இந்த கொடுக்கல் வாங்கல்களில் ரூபா 39,178,000 இலாபத்தை அடைந்திருக்க முடிந்திருந்த போதிலும் இலங்கை முதலீட்டுச் சபைக்கும் முன்னைய வசிப்பாளருக்கும் இடையில் கைசாத்திட்டிருந்த ஆரம்ப உடன்படிக்கை ஏற்பாடுகளின் விளைவால் இலங்கை முதலீட்டுச் சபையால் இதை இலாபமாக அங்கீகரித்திருக்க முடியவில்லை. இது தொடர்பில் இலங்கை முதலீட்டுச் சபை அடைந்திருந்த நட்டம் ரூபா 77,016,960 ஆக இருந்தது.

**4.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை முதலீட்டுச் சபை 2009/2010 இல் புத்தளம் செல்லகந்தவில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஒன்றை தாபிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் ஆரம்ப செலவினமாக ரூபா 11,270,120 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. பின்னர், 2012 இல் அவற்றின் மீது ஏற்பட்ட மொத்தக் கிரயம் நிறுத்திவைக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், இலங்கை முதலீட்டுச் சபை 2013 இல் அபிவிருத்தி நடவடிக்கைகளை திரும்ப ஆரப்பித்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2009 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளில், இலங்கை முதலீட்டுச் சபை 2013 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் பின்வரும் இலக்குகளை எய்துவதற்கு தவறியிருந்தது.
விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2009/2010 இல் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் புதிய முதலீட்டு ஊக்குவிப்பு வலையங்களை இனங்கண்டு ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை முதலீட்டுச் சபை இந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலையங்களை நிறுவுவதற்கு 2013 திசெம்பர் 31 வரையில் எவ்வித நடவடிக்கையும் ஆரம்பித்திருக்கவில்லை.

(ஆ) 2009/2010 அளவில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிற்கு வெளியே 300 புதிய தொழில் முயற்சிகளை அமைப்பதற்கு இலக்கிடப்பட்டதில் 89 செயற்திட்டங்கள் மாத்திரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

## 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.12 ஆம் பிரிவின்படி கணக்காய்வுக்கு குழு குறைந்தது மூன்று மாதங்களிற்கொரு முறையாவது ஒழுங்கான அடிப்படையில் கூடியிருக்க வேண்டியிருந்ததுடன் அவற்றின் அவதானிப்புக்கள் அவசிய நடவடிக்கைகளிற்காக அவர்களின் விதப்புரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கை முதலீட்டுச் சபையானது 2013 ஆம் ஆண்டின் போது நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை கூட்டியிருந்த போதிலும் ஆண்டின் கடந்த ஆறு மாதங்களின் போதே சகல கூட்டங்களும் நடைபெற்றிருந்தன, அத்தகையவாறு இது தொடர்ச்சியாக மீளாய்வு செய்கையில் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ,

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை, பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது இலங்கை முதலீட்டுச் சபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பெறவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டியவை
(இ) நிர்மாணிப்புகள்
(ஈ) ஆளணி முகாமைத்துவம்
(உ) வாகனங்களின் பாவனை
(ஊ) வருமான சேகரிப்பு